



மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்




மதுரை பதிப்பு *மணி 55 * ஓசை 95 உள்ளூர் - 06.04.2026 திங்கள் விலை ரூ.4/- பக்கங்கள்-4 Website : http://maduraimaninews.com
Madurai Edition *Vol 55 * Issue 95 வெளியூர் - 07.04.2026 செவ்வாய் Price Rs. 4/- Pages -4 Email: maduraimaninews@gmail.com

**இந்திய இராணுவத்தில் வேலைவாய்ப்பு!** | **திருமண தாமதம்: காரணங்கள் / தீர்வுகள்!** | **வெளியானது வாக்காளர்கள் இறுதி பட்டியல்!** | **அனல் பறக்கும் தேர்தல் செய்திகள்!**

# தேசமே முதன்மை என்ற கொள்கையுடன் தொடர்ந்து உழைப்போம்; பிரதமர் மோடி!

புதுடில்லி, ஏப். 06–

‘வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதில் பாஜ தொடர்ந்து உறுதியுடன் இருக்கிறது. நம் நாட்டை முன்னேற்றம் மற்றும் செழிப்பின் புதிய உச்சத்திற்கு கொண்டு செல்வோம்,’ என்று பாஜ நிறுவன நாளில் தொண்டர்களுக்கு பிரதமர் மோடி அழைப்பு விடுத்துள்ளார். அவரது எக்ஸ் தளப்பதிவு; நாடு முழுவதும் உள்ள பாஜ தொண்டர்கள் அனைவருக்கும் கட்சி நிறுவன நாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். தாய்நாட்டுக்கு பிறகு தான் அனைத்தும் என்ற கொள்கையின் அடிப்படையில் சமூகப் பணிகளை நமது கட்சி மேற்கொண்டு வருகிறது. சுயநலமில்லாத சேவை, அசைக்க முடியாத அர்ப்பணிப்பு மற்றும் நல்லாட்சியின் மீதான ஆழ்ந்த ஆர்வம்



கொண்டவர்கள் தான் நமது கட்சி தொண்டர்கள். கட்சியின் சித்தாந்தம் மற்றும் பணிகளுடன் மக்களை இணைப்பதற்காக, கட்சி தொண்டர்கள் அடிமட்ட அளவில் அயராது உழைத்துள்ளனர். பல வருடங்களாக கட்சியின் வளர்ச்சியை மேம்படுத்திய எண்ணற்ற தொண்டர்களின் அர்ப்பணிப்பு, தியாகம் மற்றும் விடாமுயற்சியையும் நாம் நினைவுகூர்ந்து பாராட்டுவோம். மக்களின் நலனை தனது தொலைநோக்குப் பார்வையின் மையமாகக் கொண்ட ஒரு கட்சியாக பாஜக திகழ்கிறது. இது மத்தியில் மற்றும் பல்வேறு மாநிலங்களில் பாஜ தலைமையிலான ஆட்சி மேற்கொண்டு வரும் பணி மூலம் பிரதிபலிக்கிறது. வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதில் பாஜ தொடர்ந்து உறுதியுடன் உள்ளது. இந்த ஒருங்கிணைந்த உறுதிப்பாடு நம்மை மேலும் வழிநடத்தும். நம் நாட்டை முன்னேற்றம் மற்றும் செழிப்பின் புதிய உயரங்களுக்குக் கொண்டு செல்லட்டும், இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 1980ம் ஆண்டு ஏப்ரல் 6ம் தேதி பாஜ அதிகாரப்பூர்வமாக துவங்கப்பட்டது. இன்று 46வது ஆண்டு விழாவை நாடு முழுவதும் உள்ள பாஜவினர் கொண்டாடி வருகின்றனர்.

# அமெரிக்கா - ஈரான் இடையே 45 நாட்கள் போர்நிறுத்தம்? பேச்சுவார்த்தை தீவிரம்!

அமெரிக்கா, ஏப். 06–

அமெரிக்கா, ஈரான் மற்றும் பிராந்திய மத்தியஸ்தர்கள் இணைந்து, போரை நிரந்தரமாக முடிவுக்கு கொண்டு வருவதற்கான முதற்கட்டமாக 45 நாட்கள் போர்நிறுத்தம் மேற்கொள்வது குறித்து ஆலோசித்து வருவதாக ஆக்சியோஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த பேச்சுவார்த்தை குறித்து நேரடித் தொடர்புடைய அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் பிராந்திய நாடுகளைச் சேர்ந்த 4 முக்கிய அதிகாரிகளை மேற்கோள் காட்டி இந்த தகவல் வெளியாகி



யுள்ளது. இருப்பினும், இந்தச் செய்தியை உறுதிப்படுத்த முடியவில்லை என ‘ராய்ட்டர்ஸ்’ நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்தப் பேச்சுவார்த்தைகள் பாகிஸ்தான், எகிப்து மற்றும் துருக்கி ஆகிய நாடுகளின் மத்தியஸ்தர்கள் வாயிலாக நடைபெற்று வருகின்றன. டிரம்ப் தரப்பு தூதரான ஸ்டீவ் விட்காஃப் மற்றும் ஈரானிய வெளியுறவுத்துறை அமைச்சர் அப்பாஸ் அரக்சி (Abbas Araghchi) ஆகியோருக்கு இடையே மெசேஜ் வாயிலாக ஆலோசனைகள் பரிமாறப்பட்டு வருகின்றன. அடுத்த 48 மணி நேரத்திற்குள் ஒருபகுதி அளவிலான ஒப்பந்தத்தை எட்டுவதற்கான வாய்ப்புகள் மிகவும் “குறைவாகவே” உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காசா அல்லது லெபனானில் ஏற்பட்டது போன்றதொரு சூழல் தங்களுக்கு உருவாகக்கூடாது என்பதில் ஈரானிய அதிகாரிகள் உறுதியாக உள்ளனர். அதாவது, காகித அளவில் மட்டும் போர்நிறுத்தம் இருந்துவிட்டு, அமெரிக்காவும் இஸ்ரேலும் எப்போது வேண்டுமானாலும் மீண்டும் தாக்குதல் நடத்தும் நிலையை ஈரான் விரும்பவில்லை.

# மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா புதுச்சேரிக்கு வருகை!

புதுச்சேரி, ஏப். 06–

மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, பா.ஜ., வேட்பாளரை ஆதரித்து பிரசாரம் செய்ய திருக்கனூர் வருகையால் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து சீனியர் எஸ்.பி., திவ்யா விடுத்துள்ள செய்திக்குறிப்பு:

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா இன்று (6ம் தேதி) மாலை 4 மணிக்கு தேர்தல் பிரசாரத்திற்கு புதுச்சேரி வருகை தந்து, திருக்கனூரில் நடக்கும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ள உள்ளார். இதையொட்டி, போக்குவரத்து நெரிசலை தவிர்க்கவும், பொது மக்களின் பாதுகாப்பை



உறுதி படுத்தவும் போக்குவரத்து மாற்றங்கள் மற்றும் வாகன நிறுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளது. அதன்படி, புதுச்சேரியிலிருந்து வரும் வாகனங்கள் திருமங்கலம், வாதானூர், மண்ணாடிப்பட்டு, மதுரபாக்கம் வழியாக விழுப்புரம் செல்ல வேண்டும். விழுப்புரத்தில் இருந்து வரும் வாகனங்கள் குச்சிப்பாளையம், ஐவேலி, கூனிச்சம்பட்டு, செட்டிப்பட்டு, கொடுக்கூர் வழியாக புதுச்சேரி செல்ல வேண்டும்.

பொதுக்கூட்டத்திற்கு வரும் பஸ்கள், வேன்கள் திருவக்கரை சாலையிலும், கார் மற்றும் பைக்கள் கார்த்திகேயன் திருமண மண்டபம், ஐயனார் கோவில் தெரு, கூனிச்சம்பட்டு பெட்ரோல் பங்க் அருகிலுள்ள இடம், புதுக்குப்பம் திரவுபதியம்மன் திடல், விஜய் கலை கல்லூரி, தீயணைப்பு நிலையம், மாதா புவனேஸ்வரி தோட்டம் பகுதிகளில் நிறுத்த வேண்டும்.

வி.வி.ஐ.பி., வழித்தடத்தில் எந்த பஸ்களையும் நிறுத்த கூடாது. விதிமுறைகள் மீறினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே வாகனங்களை நிறுத்த வேண்டும். அனுமதியில்லாத இடங்களில் நிறுத்தப்பட்ட வாகனங்கள் கிரேன் மூலம் அகற்றப்படும். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

# வெற்றி வாய்ப்பு சூப்பரா இருக்கு; 234 தொகுதிகளிலும் வெற்றி பெறுவோம்: மு.க.ஸ்டாலின் உறுதி!

சென்னை, ஏப். 06–

தமிழக சட்டமன்ற தேர்தல் வாக்குப்பதிவு வருகிற 23–ந் தேதி நடைபெறுகிறது. இந்த தேர்தல் களத்தில் தி.மு.க. கூட்டணி, அ.தி.மு.க. கூட்டணி, நாம் தமிழர் கட்சி, த.வெ.க., சசிகலா–டாக்டர் ராமதாஸ் அணி என 5 முனை போட்டி நிலவுகிறது.

தேர்தல் போட்டி களத்தில் குதித்துள்ள வேட்பாளர்கள் வீதிவீதியாக சென்று தீவிர ஓட்டு வேட்டையில் ஈடுபட்டு உள்ளனர். அவர்களை ஆதரித்து அந்தந்த கட்சி தலைவர்களும், முக்கிய நிர்வாகிகளும் சூறாவளி பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். அதன்படி தி.மு.க. மற்றும் கூட்டணி



கட்சி வேட்பாளர்களை ஆதரித்து, தி.மு.க. தலைவரும், முதல்–அமைச்சருமான மு.க.ஸ்டாலின் தனது தேர்தல் பிரசாரத்தை திருவாரூரில் கடந்த மாதம் 31–ந்தேதி தொடங்கினார். அவர், பொதுக்கூட்டங்கள் மூலமாக வாக்குசேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்.

அதன்படி அவர் நேற்று காலையில் விருதுநகரிலும், இரவில் மதுரையிலும் பிரசாரம் செய்தார். இவ்வாறு 2 கட்ட தேர்தல் பிரசார சுற்றுப்பயணத்தை அவர் நிறைவு செய்துள்ளார். இதன் மூலம் அவர், தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சிகளை சேர்ந்த 65 வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டி உள்ளார். அவர் தனது 3–வது கட்ட பிரசாரத்தை புதுச்சேரியில் தொடங்குகிறார்.

இந்த நிலையில், மதுரை விமான நிலையத்தில் செய்தியாளர்கள் சந்திப்பில் முதல்–அமைச்சர் மு.க. ஸ்டாலின் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது, “தமிழகத்தில் திமுக இருக்கும் வரை மும்மொழி கொள்கையை மத்திய அரசால் கொண்டு வரமுடியாது. வெற்றி வாய்ப்பு சூப்பரா இருக்கு; 234 தொகுதிகளிலும் வெற்றி பெறுவோம்” என்று கூறினார்.

## வெளியாகும் அறிவிப்பு!

# குறையுமா? வீட்டு , வாகன கடன் வட்டி

## ரிசர்வ் வங்கி அதிகாரிகள் தீவிர ஆலோசனை..!!

புதுடெல்லி, ஏப். 06–

ஈரான் போர் இந்தியாவின் பொருளாதாரத்தில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது. எல்பிஜி தட்டுப்பாடு ஹோட்டல் உணவுகளின் விலைகளை உயர்த்தி இருக்கிறது. தனியார் எண்ணெய் நிறுவனங்கள் பெட்ரோல், டீசல் விலைகளை உயர்த்தியுள்ளன. இந்த சூழலில் 2026 – 27 ஆம் நிதியாண்டிற்கான முதல் நாணயக் கொள்கை குழு கூட்டம் மும்பையில் தொடங்கி இருக்கிறது. இந்த கூட்டத்தில் ரிசர்வ் வங்கி ரெப்போ வட்டி விகிதத்தை குறைக்குமா அல்லது அதே அளவில் நீட்டிக்கச் செய்யுமா என்ற எதிர்பார்ப்பு அதிகரித்து இருக்கிறது.



கடந்த ஆண்டு இந்திய ரிசர்வ் வங்கி 1.25% வரை ரெப்போ வட்டி விகிதத்தை குறைத்தது. இதனால் வீட்டுக் கடன் மற்றும் வாகன கடன்களுக்கான வட்டியும் ஒரு சதவீதத்திற்கும் மேல் குறைந்தது. வங்கிகளில் கடன் வாங்கியவர்களுக்கு பல லட்சங்கள் சேமிக்கப்பட்டன. ஈரான் போர் சூழலுக்கு மத்தியில் நடப்பு நிதியாண்டின் முதல் நாணயக் கொள்கை குழு கூட்டம் மும்பையில் இன்று

திங்கள் கிழமை தொடங்கி புதன்கிழமை வரை நடைபெறுகிறது. ஆளுநர் சஞ்சய் மல்கோத்ரா தலைமையிலான ஆறு பேர் கொண்ட அதிகாரிகள் நாட்டின் தற்போதைய பொருளாதார சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, பணவீக்கம் , ஏற்றுமதி, இறக்குமதி, ஈரான் போரால் இந்தியாவில் ஏற்பட்டிருக்க கூடிய தாக்கங்கள் உள்ளிட்ட அனைத்தையும் குறித்து விரிவாக ஆலோசனை நடத்த உள்ளனர். இதனை அடுத்து புதன்கிழமை காலை 10 மணிக்கு செய்தியாளர்களுக்கு பேட்டியளிக்கும் சஞ்சய் மல்கோத்ரா இந்த ஆலோசனை கூட்டத்தில் எடுத்த முடிவுகளை வெளியிடுவார்.

பொதுவாக ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கை குழு கூட்டம் என்றாலே ரெப்போ வட்டி விகிதத்தில் மாற்றம் இருக்குமா ?என்ற எதிர்பார்ப்பு தான் அதிகமாக இருக்கும். ரெப்போ வட்டி என்பது ரிசர்வ் வங்கி மற்ற வங்கிகளுக்கு வழங்கக்கூடிய கடன்களுக்கான வட்டி. இந்த வட்டி குறைக்கப்படும்போது வங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கக்கூடிய கடன்களுக்கான வட்டியை குறைக்கின்றன.

அந்த வகையில் கடந்த ஆண்டு ஒரு சதவீதத்திற்கும் மேல் நம்முடைய வீட்டு கடன் மற்றும் வாகன கடன் ,தங்க நகை கடன்களுக்கான வட்டிகள் குறைந்தன. இந்த ஆலோசனை கூட்டத்தில் ரிசர்வ் வங்கி வட்டி குறைப்பு நடவடிக்கையை மேற்கொள்ளுமா என்ற எதிர்பார்ப்பு எழுந்து இருக்கிறது. இந்த நிலையில் குட் ரிட்டர்ன்ஸ் நடத்திய வாக்கெடுப்பில் 92% பங்கேற்பாளர்கள் ரிசர்வ் வங்கி இந்த முறை ரெப்போ வட்டி விகிதத்தை மாற்றம் இல்லாமல் 5.25% என்ற அளவிலேயே நீட்டிக்கச் செய்யும் என தெரிவித்திருக்கின்றனர். அதாவது பெரும்பாலானவர்கள் ரிசர்வ் வங்கி ரெப்போ வட்டியில் மாற்றத்தை ஏற்படுத்தாது என தெரிவித்திருக்கின்றனர். அதே வேளைல் அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பை தக்க வைக்க வேண்டும் என்பதற்காக சில அறிவிப்புகளை ஆர்பிஐ வெளியிடலாம் என சொல்லப்படுகிறது. மேலும் நாட்டின் பணவீக்க இலக்கினை உயர்த்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அப்படி என்றால் பல்வேறு பொருட்களின் விலை வாசி உயரும் என அர்த்தம்.

# தமிழகத்திலிருந்து மாநிலங்களவைக்குத் தேர்வான புதிய எம்.பி.க்கள் பதவியேற்பு!

புதுடெல்லி, ஏப். 06–

மாநிலங்களவைக்கு தேர்வு செய்யப்பட்ட புதிய எம்பிக்கள் பதவியேற்று வருகின்றனர்.

அந்த வகையில், தமிழ்நாட்டில் இருந்து மாநிலங்களவைக்கு திமுக சார்பில் தேர்வு செய்யப்பட்ட திருச்சி சிவா மீண்டும் பதவி ஏற்றுக்கொண்டார்.

கான்ஸ்டண்டைன் ரவீந்திரன் மாநிலங்களவை உறுப்பினராக பதவி ஏற்றுக்கொண்டனர். திமுக கூட்டணியில்



காங்கிரஸ் சார்பில் மாநிலங்களவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட கிறிஸ்டோபர் திலக் பதவியேற்றுக் கொண்டார்.

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ், தேமுதிக பொருளாளர் சுதீஷ் ஆகியோர் எம்.பி.க்களாக பதவியேற்றுக் கொண்டனர்.

அதிமுக சார்பில் மு. தம்பிதுரை நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராக பதவியேற்று கொண்டார்.

பதவியேற்ற புதிய எம்பிக்களுக்கு மாநிலங்களவைத் தலைவர் சி.ப.ராதாகிருஷ்ணன் வாழ்த்து தெரிவித்தார்.

# ஜாபர் சாதிக் தொடர்புடைய இடங்களில் சோதனை!

சென்னை, ஏப். 06–

ஜாபர் சாதிக்கு சொந்தமான இடங்களில் சென்னை உள்ள அண்ணா சாலை, புரசைவாக்கம், எழும்பூர், பட்டினப்பாக்கம் உள்ளிட்ட பத்துக்கும் மேற்பட்ட இடங்களில் வருமான வரித்துறை அதிகாரிகள் இந்த சோதனையில் ஈடுபட்டுள்ளனர். இந்த சோதனையில் கடந்த 2024 ஆம் ஆண்டு 2000 கோடி ரூபாய் போதைப் பொருள் கடத்தல் வழக்கில் சிக்கிய திரைப்பட தயாரிப்பாளரும் தொழிலதிபருமான ஜாபர் சாதிக் தொடர்புடைய இடங்களிலும் நிறுவனங்களிலும் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

ஜாபர் சாதிக் கடந்த 2024 ஆம் ஆண்டு மத்திய போதைப் பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகள் மற்றும் அமலாக்கத் துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட நிலையில் சமீபத்தில்தான்



அவர் ஜாமினில் வெளியே வந்திருந்தார்.

இந்தநிலையில் தேர்தல் பணப்பட்டுவாடா நடப்பதாக வந்த தகவலின் அடிப்படையில் அண்ணா சாலையில் அவருக்கு சொந்தமான விடுதி ஒன்றிலும், பட்டினப்பாக்கத்தில் உள்ள ஜாபர் சாதிக்கு சொந்தமான வீட்டிலும், புரசைவாக்கம் பகுதியில் உள்ள அவரது விடுதியிலும், இதே போல் சுமார் பத்துக்கும் மேற்பட்ட இடங்களிலும் வருமான வரித்துறை அதிகாரிகள் திங்கள்கிழமை காலை முதல் சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

முழுமையான சோதனைக்குப் பிறகு அவர் யாருடைய பணத்தையாவது பதுக்கி வைத்திருந்தாரா பணப் பட்டுவாடாவில் ஈடுபட்டாரா என்பது குறித்து தெரியவரும் எனவும் வருமான வரித்துறை அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பறிமுதல் செய்யப்பட்ட பணம் ஆவணங்கள் குறித்தும் முழுமையான சோதனைக்குப் பிறகு தெரியவரும் என அதிகாரிகள் தரப்பில் இருந்து தகவல்கள் தெரிவிக்கப்படும் என கூறப்படுகிறது. சென்னையில் ஒரு சிலர் பணப் பட்டுவாடா செய்வதாக வந்த தகவலில் அடிப்படையில் வருமானவரித் துறை அதிகாரிகளுக்கும், தேர்தல் பறக்கும் படை அதிகாரிகளுக்கும் சோதனை மேற்கொண்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## தலையங்கம்

மதுரை மணி

திங்கட்கிழமை 06.04.2026

விசுவாவசு தமிழ் வருடம்

பங்குனி மாதம் 23-ம் தேதி

# போர் பதற்றத்திலும் தங்கம் வீழ்வது ஏன்?



உலகமே ஒரு பெரும் போர் மேகத்தின் மத்தியில் பதற்றம் கொண்டிருக்கும் வேளையில், முதலீட்டு சந்தையின் விதி தலைகீழாக மாறத் தொடங்கியுள்ளது. பொதுவாக போர் அல்லது அசாதாரண சூழல்களில் தங்கம் விலை விண்ணை தொடும் என்பதுதான் வரலாறு. ஆனால் இந்த அமெரிக்கா – ஈரான் மோதலில் நிலைமை அப்படியே தலைகீழாக இருக்கிறது. ஒரு பக்கம் ஈரான் மீதான தாக்குதல் மறுபுறம் ஹார்மூஸ் ஜலசந்தி முடக்கத்தால் கச்சா எண்ணெய் விலை பேரலுக்கு 100 டாலரை நெருங்கி கொண்டிருக்க, மறுபக்கம் பாதுகாப்பான முதலீடாக கருதப்பட்ட தங்கம் கடந்த மூன்று மாதத்தில் 17% வரை சரிந்து முதலீட்டாளர்களை அதிர வைத்துள்ளது.

கடந்த ஒரு மாதத்திலும் 10% மேலாக சரிவை கண்டுள்ளது. எண்ணெய் விலை உயர்வால் ஏற்படும் பணவீக்கத்தை கட்டுப்படுத்த, அமெரிக்க பெடரல் வங்கி வட்டி விகிதங்களை குறைக்காது என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. இதனால் முதலீட்டாளர்கள் வட்டியில்லா முதலீடான தங்கத்தை தவிர்த்து, லாபம் தரும் அமெரிக்க டாலர் மற்றும் பத்திரங்கள் பக்கம் முதலீட்டாளர்கள் படையெடுக்க தொடங்கியுள்ளனர். வரலாற்றில் எப்போதும் இல்லாத வகையில், தங்கத்தின் பாதுகாப்பு புகலிடம் என்ற அந்தஸ்தை டாலர் தட்டி பறித்து விடுமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. போர் பதற்றத்திலும் தங்கம் சரிவதற்கான உண்மையான காரணங்கள் தான் என்ன. உங்கள் கடின உழைப்பின் சேமிப்பை இந்த இக்கட்டான நேரத்தில் எங்கே முதலீடு செய்வது என பல கேள்விகள் உங்களிடத்தில் இருக்கலாம்.

ஆரம்பத்தில் போர் தொடங்கிய போது சற்று ஏற்றம் கண்ட தங்கம், பின்னர் சரிவையே கண்டு வருகிறது. மறுபுறம் அமெரிக்கா, ஈரான் போரில் நேரடியாக சம்பந்தப்பட்டுள்ள நிலையிலும் டாலர் மதிப்பு பலமான கரன்சியாக உருவெடுத்துள்ளது. இது கச்சா எண்ணெய் விலை உயர்வால் அதிகரிக்கும் பணவீக்கத்தை கட்டுப்படுத்த, வட்டி விகிதம் குறைக்கப்படாது என்ற வலுவான நம்பிக்கை மத்தியில் காணப்படுகிறது. இதனால் வட்டி குறைப்பு செய்யப்படாமல், உச்சத்திலேயே வைத்திருக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இது வட்டியில்லா தங்கத்தை விட, அதிக வருமானம் தரும் டாலர் சார்ந்த முதலீடுகளை நோக்கி முதலீட்டாளர்களை ஈர்க்கலாம். இந்த சூழலில் தான் சமீபத்திய காலமாக தங்கமானது பாதுகாப்பு புகலிடம் என்ற பொலிவை இழந்து வருகிறது.

அமெரிக்க டாலர் ஏற்றம், வலுவான பத்திர சந்தை உண்மையில் தங்கத்தின் தேவையை சற்று குறைத்துள்ளன. இனியும் குறைக்கலாம். இது குறுகிய காலத்தில் தங்கம் விலையில் அழுத்தம் ஏற்பட காரணமாக அமைந்துள்ளன. எனினும் இந்த சமயத்தில் டாலர் ஏன் முக்கிய முதலீடாக பார்க்கப்படுகிறது? இதற்கு முக்கிய காரணம் கச்சா எண்ணெய் விலை ஏற்றம் தான். சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் வர்த்தகம், இன்றும் பெரும்பாலும் டாலரில் தான் நடைபெறுகிறது. இது டாலரின் தேவையை ஊக்கப்படுத்துகிறது. இதனிடையே தான் பல பதற்றமான சூழலிலும் டாலர் வலுவாகவே காணப்படுகிறது. இதுவே ரூபாய் போன்ற கரன்சிகள் அதல பாதாளத்தை எட்டி வரும் நிலையிலும், டாலர் வலுவாக காணப்படுகிறது

தற்போது அமெரிக்காவுக்கு ஏற்றவாறு ஈரான் ஹார்மூஸ் ஜலசந்தியை மூடியுள்ளதால் எண்ணெய் வர்த்தகம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இது மேற்கொண்டு கச்சா எண்ணெய் விலை அதிகரிக்க வழிவகுக்கும். ஹார்மூஸ் ஜலசந்தியை திறக்க அமெரிக்கா கூறி வந்தாலும், ஒரு வகையில் இது அமெரிக்காவுக்கு லாபம் தான். இருப்பினும் டாலரின் ஆதிக்கம் என்பது நிரந்தரமானது அல்ல. அமெரிக்காவின் தொடர் வரி நடவடிக்கைகள், பொருளாதார தடைகள், ராணுவத் தலையீடுகள் உள்ளிட்ட நடவடிக்கைகள் டாலர் மீதான நம்பிக்கையை குறைக்க தொடங்கியுள்ளன. மேற்கொண்டு அமெரிக்காவின் கடன் சுமையும் அதிகரித்து வருவது நிதி நெருக்கடிக்கு வழிவகுக்கலாம். இது நீண்ட கால அடிப்படையில் டாலர் மதிப்பில் தாக்கத்தை ஏற்படுத்தலாம். ஆக தற்போதைக்கு தங்கம் அதன் முக்கியத்துவத்தை இழப்பது போல தோன்றினாலும், நீண்ட கால அடிப்படையில் அப்படி இல்லை. தங்கத்திற்கான இடம் எப்போதும் அசைக்க முடியாது தான். குறுகிய காலத்தில் அப்படி இருந்தாலும் நீண்ட கால அடிப்படையில் அப்படி இருக்காது.

# இனி ஏர்போர்ட்ல பல நூறு தேவையில்லை! வெறும் ரூ10-க்கு டீ.. ரூ20-க்கு சமோசா! உடான் யாத்ரி கஃபே அதிரடி!!



புதுடெல்லி, ஏப். 06–

ஏர்போர்ட்ல போயிட்டு ஒரு டீ குடிக்கலாம்னு பார்த்தா.. அந்த டீ விலையை பார்த்துட்டு அந்த ஆசையே அடங்கிப்போகும். அப்படின்னு புலம்புறவங்களுக்கு மத்திய அரசு ஒரு செம ட்ரீட் கொடுத்திருக்கு. இனி ஏர்போர்ட் போனா தைரியமா பர்ஸில் இருந்து சில்லறைய எடுக்கலாம். ஏன்னா வெறும் 10 ரூபாய்க்கு சூடா ஒரு டீ, 20 ரூபாய்க்கு மொறுமொறு சமோசா கொடுக்க வந்துருச்சு உடான் யாத்ரி கஃபே. இது ஏதோ ஒரு இடத்தில் மட்டும் இல்ல, 24 ஏர்போர்ட்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு இருக்கு. உண்மையில் இது மிக நல்ல விஷயம் தான். ஆனால் இதில் நம்ம சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை ஏர்போர்ட்கள் இருக்கா? உண்மையில் உடான் யாத்ரி கஃபே சாமானிய மக்களுக்கு ஒரு மிகப்பெரிய வரப்பிரசாதம் தான். ஏனெனில் விமான நிலையம் என்றாலே விலை அதிகம். அங்கு வசதியானவர்களுக்கு ஏற்ற வகையில் தான் இருக்கும் என்ற பிம்பத்தை உடைத்து ள்ளது. மத்திய அரசின் உடான் திட்டத்தின் நோக்க மே சாமா னியர்களும் விமானத்தில் பறக்க வேண்டும் என்பது தான். குறைந்த கட்டணத்தில் டிக்கெட் எடுத்து பயணம் செய்பவர்கள், விமான நிலையில் ஒரு காபி குடிக்க 200 – 300 ரூபாய் செலவு செய்ய வேண்டியிருக்கும். இது பலரையும் தயக்கத்தில் ஆழ்த்தி வந்தது. ஆனால் இனி அந்த தயக்கம் தேவையில்லை. விமான நிலையத்தில் 10 ரூபாய்க்கு டீயும், 20 ரூபாய்க்கு சமோசாவும் கிடைக்கும். நாடு முழுவதும் உள்ள 24 விமான நிலையங்களில் அமல்படுத்தப்பட்டுள்ள இந்த உடான் யாத்ரி கஃபே திட்டம், பயணிகளுக்கு குறைந்த விலையில் உணவு வழங்கும். விமான நிலையங்கள் நவீனமயமாக்குவதுடன், சாதாரண மக்களும் விமான பயணம் மேற்கொள்வதை உறுதி செய்யும் முயற்சியாக இது பார்க்கப்படுகிறது.

தமிழகத்தை பொறுத்த வரையில் சென்னை, கோயம்புத்தூர், மற்ற மாநிலங்களில் கொல்கத்தா, ஹைதராபாத், விஜயவாடா, ஹோலோங்கி (அருணாச்சல பிரதேசம்), அகமதாபாத், புனே, சூரத், மும்பை, புவனேஸ்வர், திருவனந்தபுரம், மங்களூரு, ராஜ்கோட், சண்டிகர், ஜம்மு, பாட்னா, இந்தூர், அமிர்தசரஸ், வாரணாசி, குவாலியர், அகர்தலா, ஜெய்ப்பூர் மற்றும் லக்னோ போன்ற விமான நிலையங்களில் இந்த உடான் சேவையானது கிடைக்கும்.

இது குறித்து மக்களவையில் சிவில் போக்குவரத்து துறை இணையமைச்சர் முரளிதர் மோஹோல், பயணிகளின் மலிவு விலை உணவு தேவையை நிவர்த்தி செய்ய பொது தனியார் பங்களிப்பு மாதிரியில் இயங்கும் விமான நிலையங்கள் உட்பட பல இடங்களில் உடன் யாத்ரி கஃபே போன்ற குறைந்த விலை உணவகங்களில் தொடங்கப்பட்டுள்ளன. மற்ற விமான நிலையங்களில் இத்தகைய உணவகங்களை அமைப்பது என்பது அந்தந்த விமான நிலைய நிர்வாகிகளின் முடிவைப் பொறுத்தது என்றும் தெரிவித்துள்ளார். does the இங்கு வாட்டர் பாட்டில் 10 ரூபாய், டீ 10 ரூபாய், காஃபி 20 ரூபாய், சமோசா 20 ரூபாய், ஸ்வீட் ஆப் தி டே 20 ரூபாய் என்றும் PIB தரவானது சுட்டிக் காட்டியுள்ளது.

# 12-ம் வகுப்பு மாணவர்களின் விடைத்தாள் திருத்தும் பணி தொடக்கம்!



சென்னை, ஏப். 06–

பன்னிரெண்டாம் வகுப்பு விடைத்தாள் திருத்தும் பணிகள் இன்று தொடங்க உள்ளதாக அரசுத் தேர்வுகள் இயக்ககம் தெரிவித்துள்ளது. தமிழ்நாடு மாநிலப்பாடத்திட்டத்தில் படித்து பொதுத்தேர்வு எழுதிய 12–ம் வகுப்பு மாணவர்கள் மற்றும் 11 –ம் வகுப்பு தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கான விடைத்தாள்கள் திருத்தும் பணிகளை இன்று முதல் ஏப்ரல் 20–ஆம் தேதி வரை மேற்கொள்ள அரசுத் தேர்வுகள் இயக்ககம் உத்தரவிட்டுள்ளது. தமிழ்நாடு மாநிலப் பாடத்திட்டத்தில் படித்த மாணவர்களுக்கான 12–ஆம் வகுப்பு மற்றும் 11–ஆம் வகுப்பு தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கான பொதுத் தேர்வு மார்ச் 2–ஆம் தேதி முதல் மார்ச் 27–ஆம் தேதி வரையில் நடைபெற்றது. இந்தத் தேர்வை எழுதுவதற்கு மாநிலம் முழுவதும் மொத்தம் 7,99,692 மாணவ, மாணவிகள விண்ணப்பித்திருந்தனர். 12–ஆம் வகுப்பு மற்றும் 11–ஆம் வகுப்பு தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கான பொதுத் தேர்வு விடைத்தாள் திருத்தும் பணியை முதன்மை தேர்வாளர் மற்றும் கூர்ந்தாய்வு அலுவலர்கள் இன்று நடைபெறும் . அவர்கள் அரசுத் தேர்வு இயக்ககத்தால் வழங்கப்பட்டுள்ள விடைக்குறிப்பில் ஏதேனும் மாற்றம் இருந்தால் தெரிவிக்க வேண்டும். அதனைத் தொடர்ந்து ஏப்ரல் 7–ஆம் தேதி முதல் 20–ஆம் தேதிக்குள் உதவி தேர்வாளர்களாக நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் விடைத்தாள்களை திருத்தம் செய்யப்படும். இந்தப் பணிகளை 20–ஆம் தேதிக்குள் முகாம்களில் முடிக்க வேண்டும் எனவும், 12–ம் வகுப்பு தேர்வு முடிவுகள் மே 8–ம் தேதி வெளியிடப்பட முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அரசுத் தேர்வுத்துறை இயக்கக அதிகாரி தெரிவித்தார்.

# கடந்த 2 வாரங்களில் நாடு முழுவதும் 6.6 லட்சம் 5 கிலோ சிலிண்டர் விற்பனை!



புதுடெல்லி, ஏப். 06–

ஹோர்முஸ் நீரிணையில் சரக்குக் கப்பல்கள் பயணிப்பதில் இடையூறுகள் ஏற்பட்டுள்ளபோதிலும் எல்பிஜி சமையல் எரிவாயு தட்டுப்பாடின்றி விநியோகிக்கப்படுவதாகவும் மத்திய எண்ணெய் அமை ச்சகம் தெரிவித்தது. இதுகுறித்து அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:–

மார்ச் 23–ஆம் தேதியில் இருந்து எல்பிஜி சமையல் எரிவாயு மையங்களில் 6.6 லட்சம் சிலிண்டர்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. ஒரு நாளைக்கு சராசரியாக 51 லட்சம் 14.2 கிலோ எல்பிஜி சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்படுகின்றன. இதில் 95 சதவீதம் இணைய வழியில் முன்பதிவு செய்யப்படுகிறது.

சிலிண்டர்களை பதுக்கும் விநியோக மையங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. கடந்த மார்ச் மாதத்தில் இருந்து 50,000 சிலிண்டர்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. 1,400 எல்பிஜி சமையல் எரிவாயு விநியோக மையங்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டு 36 விற்பனையாளர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் நாட்டில் வீடுகளுக்குப் பயன்படுத்தப்படும் எல்பிஜி சமையல் எரிவாயு தட்டுப்பாடின்றி விநியோகிக்கப்படுகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய ரெயில்வேயில் இணையதளம் மூலம் 48.25 கோடி டிக்கெட்டுகள் முன்பதிவு!



சென்னை, ஏப். 06–

இந்தியாவில் ரெயில் பயணம் பொதுமக்களின் முக்கிய போக்குவரத்து முறையாக இருந்து வருகிறது. தினசரி கோடிக்கணக்கான மக்கள் பயணிப்பதால், டிக்கெட் முன்பதிவு முறைகள் காலத்துக்கு ஏற்றவாறு நவீனமயமாக மாற்றப்படுட்டு உள்ளன.

அந்தவகையில், இந்திய ரெயில்வே, 2025–26 நிதியாண்டில் (ஏப் ரல் முதல் பிப்ரவரி மாதம் வரை) 48.25 கோடிக்கும் அதிகமான டிக்கெட்டுகள் இணையதளம் மூலம் முன்பதிவுகள் செய்யப்பட்டு உள்ளன. மொத்தமாக முன்பதிவு செய்யப்பட்ட டிக்கெட்டுகளில் ஏறக்குறைய 88 சதவீதம் ஆன்லைனில் முன்பதிவு செய்யப்பட்டு இருப்பதாக ரெயில்வே வாரியம் தெரிவித்து உள்ளது.

ரெயில்வே டிக்கெட் முன்பதிவு முறைகள் டிஜிட்டல் மாற்றத்தால் மிகவும் வேகமாக வளர்ச்சி பெற்றுள்ளன. இது எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கும் என ரெயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

# நிலவை நெருங்கும் ஆர்டெமிஸ் 2 விண்கலம்!




நிலவுக்கு மீண்டும் மனிதர்களை அனுப்பும் லட்சிய திட்டத்தை அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா மீண்டும் முன்னெடுத்துள்ளது. பல கட்ட சோதனைகளுக்கு பிறகு ஆர்டெமிஸ்–2 திட்டத்தை நாசா வெற்றிகரமாக செயல்படுத்தியது. கனடா நாட்டின் விண்வெளி வீரர் உள்பட 4 வீரர்கள் அடங்கிய இந்த குழுவினர் ஒரு நாள் முழுவதும் பூமியைச் சுற்றி வந்து விண்கலத்தின் உயிர் காக்கும் வசதிகளைச் சோதித்தனர்.

பின்னர், ‘டிரான்ஸ்லூனார் இன்ஜெக்ஷன்’ என்ற என்ஜின் எரிப்பு மூலம் நிலவை நோக்கிச் செலுத்தப்பட்டனர். இவர்கள் நிலவின் மறுபக்கத்தை மிக நெருக்கமாகவும், நேரடியாகவும் காணும் முதல் மனிதர்கள் என்ற சாதனையைப் படைக்க உள்ளனர். இந்த ஒட்டுமொத்த திட்டத்தின் மதிப்பு ரூ.8.64 லட்சம் கோடி ஆகும். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பயணம் 2028–ல் திட்டமிடப்பட்டுள்ள மனிதர்களின் நிலவுத் தரையிறக்கத்துக்கு (ஆர்டெமிஸ் 4) ஒரு முன்னோட்டமாக அமையும்.

ஆர்டெமிஸ் 2 எனும் விண்கலம் நான்கு விண்வெளி வீரர்களுடன், கடந்த 2 ஆம் தேதி அமெரிக்காவின் புளோரிடாவில் இருந்து புறப்பட்டது. இன்று காலை நிலவரப்படி நிலவின் வட்டப்பாதையை ஆர்டெமிஸ் நெருங்கியுள்ளது. இன்று இரவு நிலவின் மறுபக்கத்திற்கு ஓரியன் விண்கலம் செல்ல உள்ளது. நிலவை நெருங்கி செல்லும் நேரத்தில் விண்வெளி வீரர்கள் நிலவின் தரைப்பகுதியில் என்ன உள்ளது என்பதை ஆய்வு செய்ய உள்ளனர்.

# ஈரானில் குடியிருப்பு கட்டிடம் மீது வான்வழி தாக்குதல்: 13 பேர் பலி!




ஈரான், ஏப் 06–

ஈரான் தலைநகர் தெஹ்ரானின் தென்மேற்கு பகுதியில் உள்ள ஒரு குடியிருப்பு கட்டிடம் மீது வான்வழி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்த தாக்குதலில் 13 பேர் பலியாகியுள்ளனர். இந்த தாக்குதலை நடத்தியது அமெரிக்காவா அல்லது இஸ்ரேலா என்ற விவரம் தெரியவில்லை. தெஹ்ரானில் உள்ள ஷரீஃப் பல்கலைக்கழகத்தை குறிவைத்தும் வான்வழி தாக்குதல் நடைபெற்றுள்ளது. வான்வழி தாக்குதலால், குடியிருப்பு கட்டிடம் சேதம் அடைந்துள்ளதோடு, இயற்கை எரிவாயு விநியோகமும் பாதிக்கப்பட்டுள்ளதாக ஈரான் கூறியுள்ளது



# திருமண தாமதம்: பொதுவான காரணங்கள் மற்றும் தீர்வுகள்!



ஜோதிடர்களின் கூற்றுப்படி, திருமண தடை உண்டாவதன் மிக முக்கிய காரணமாக, ஜாதகத்தில் 7–ஆம் வீட்டில் காணப்படும் கிரக நிலைகள் என நம்பப்படுகிறது. குறிப்பாக சுக்கிரன் மற்றும் குருவின் நிலைபாடு, ஜாதகத்திற்கு உரியவரின் திருமண தடைக்கு முக்கிய காரணமாக அமையலாம். இந்த பிரச்சனைகளை சமாளிக்க (திருமண தடையை நீக்க) கிரகங்களின் ஆற்றல் சமநிலையை உறுதி செய்வது அவசியம். மேலும், நிபுணர்கள் பரிந்துரைக்கும் சரியான பரிகாரங்களை முறையாக செய்வதும் அவசியம் என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்!

**நிபுணர்கள் பார்வையில், திருமணம் தள்ளிப்போவதன் பொதுவான காரணங்கள்!**

நிபுணர்கள் கூற்றுப்படி, தனி ஒரு நபரின் ஜாதகத்தில் 7–வது வீட்டில் கிரகங்களின் ஆற்றல் சமநிலை பாதிப்பது, எதிர்மறை தாக்கத்தை உண்டாக்குவது திருமண தடைக்கு முக்கிய காரணமாக அமையும். குறிப்பாக, திருமணத்தை தள்ளிப்போடும், நல்ல வரன் கிடைத்து விரைவில் நடக்க இருந்த திருமணம் இறுதி நொடியில் தடைபடும்.

தனி ஒரு நபரின் ஜாதகத்தில் ஏழாம், எட்டாம் அல்லது பன்னிரண்டாம் வீட்டில் செவ்வாய் இருப்பது, மாங்கல்ய தோஷத்தை உண்டாக்கும். இதன் தாக்கம் திருமணத்தை தள்ளிப்போடுவதோடு, திருமணம் முடித்த தம்பதியரின் வாழ்க்கையில் மனஸ்தாபங்களை அதிகரிக்கும். கருத்து வேறுபாடுகளை உண்டாக்கும், மன அமைதியையும் பாதிக்கும். ஜோதிட கணிப்புகள் படி தனி ஒரு நபரின் ஜாதகத்தில் 7–வது வீட்டையோஅல்லது 7–ஆம் வீட்டின் அதிபதியையோ சனி பாதித்தால், ஜாதகத்திற்கு உரியவரின் திருமணம் தள்ளிப்போகும் அபாயம் உள்ளது.

திருமணம் முடிக்காத ஆணின் ஜாதகத்தில் சுக்கிரன் அல்லது குருவின் நிலை பலவீனமாக இருப்பின், அவரது திருமணத்தில் தாமதம் நீடிக்கலாம். மேலும், அவருக்கு பொருத்தமான வாழ்க்கை துணையை தேர்வு செய்வதிலும் தாமதம் நீடிக்கலாம்.

ஏழாம் வீட்டின் அதிபதி வக்ர நிலையில் இருப்பதும், ஜாதகத்திற்கு உரியவரின் திருமண காரியங்களை தள்ளிப்போடும் என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். இதன் தாக்கம் அவர்களின் திருமண வாழ்க்கையை மட்டும் அல்ல, தனிப்பட்ட வளர்ச்சியையும் பாதிக்கும் என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

திருமணம் முடிக்காத பெண்களின் ஜாதகத்தில் குரு கிரகம் பலவீனமான நிலையில் இருக்கும் பட்சத்தில், அவரது திருமணம் தள்ளிப்போகலாம், திருமண காரியங்களில் பல்வேறு சிக்கல்கள் உண்டாகலாம் என கூறப்படுகிறது.

**பரிகாரம் எதும் உண்டா?**

திருமணம் முடிக்காத பெண்கள் தங்கள் திருமண தடையை போக்க, தங்கள் ஜோதிடரின் வழிகாட்டுதல் படி மஞ்சள் புஷ்பராகத்தை அணியலாம். இவ்வாறு செய்வது, குருவின் ஆற்றல் சமநிலையை மேம்படுத்தும், அவர்களின் வாழ்க்கையில் மங்களகரமான மாற்றங்களை கொண்டு வரும். சனியின் தாக்கத்தால் திருமண தடை சந்திக்கும் நபர்கள், வாரம்தோறும் சனிக்கிழமைகளில் அரச மரத்தின் கீழ், எண்ணெய் தீபம் ஏற்றி – சனி தேவனை முறையாக வழிபட்டு வர நேர்மறை பலன்களை காணலாம்.

பொதுவான திருமண தடை பிரச்சனைகளுக்கு, மஞ்சள் நிற பொருட்களை தானமாக வழங்கலாம். குறிப்பாக பருப்பு, மஞ்சள் நிற ஆடைகள் போன்றவற்றை நீங்கள் மற்றவர்களுக்கு தானமாக அளிக்கலாம்.

பொறுப்புத் துறப்பு: இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் பரிகாரங்கள், பொதுவான ஜோதிட நம்பிக்கைகள் மற்றும் மரபு வழி நம்பிக்கைகளின் அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளது. தனி நபரின் ஜாதக அமைப்பு, கிரக நிலை பொறுத்து பலன்கள் நபருக்கு நபர் மாறுபடலாம். எனவே, உங்கள் குடும்ப ஜோதிடரிடம் ஆலோசனை செய்து, பரிகாரங்களை முயற்சிப்பது நல்லது!

# 45 பேர் பலி.. 400-க்கும் மேற்பட்ட வீடுகள் தரைமட்டம்! பாகிஸ்தானை புரட்டி எடுக்கும் கனமழை..!!



பாகிஸ்தான், ஏப். 06–

பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் கடந்த மார்ச் 25–ஆம் தேதி முதல் இடைவிடாமல் பெய்து வரும் கனமழை மக்களின் இயல்பு வாழ்க்கையை முழுமையாக பாதித்துள்ளது. தொடர்ச்சியான மழையால் பல பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதுடன், வீடுகள், சாலைகள் கடுமையாக சேதமடைந்துள்ளன. மழை மற்றும் வெள்ளம் தொடர்பான விபத்துகளில் சிக்கி இதுவரை 45 பேர் உயிரிழந்துள்ளதாக அதிகாரப்பூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன. இதில் 23 சிறுவர்கள் உயிரிழந்தது மிகுந்த சோகத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. சுவர் இடிந்து விழுதல் மற்றும் மின்சாரம் தாக்குதல் போன்ற விபத்துகளில் சிக்கி இதுவரை 105 பேர் படுகாயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கனமழையின் தாக்கம் வீடுகளிலும் பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் சுமார் 60 வீடுகள் முற்றிலும் இடிந்து தரைமட்டமாகி உள்ளன. மேலும், 382 வீடுகள் கடுமையாக சேதமடைந்துள்ளன. இதன் மூலம் மொத்தம் 442 வீடுகள் மழையால் பாதிக்கப்பட்டுள்ளதாக பேரிடர் மேலாண்மைத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## அமைதியாக உயிரைப் பறிக்கும் நோய்கள் இவை தான்..! பரிசோதனை செய்தால் நல்லது..!




'சைலண்ட் கில்லர்' நோய்களின் உண்மையான இயல்பு என்னவென்றால், நோய் உள்ளுக்குள் மோசமடைந்து கொண்டிருந்தாலும், மேற்பரப்பில் எந்த அறிகுறிகளும் வெளிப்படுவதில்லை. வலியும் இல்லை, அன்றாட நடவடிக்கைகளில் எந்த இடையூறும் இல்லை என்பதால், எல்லாம் நன்றாக இருக்கிறது என்ற மாயையில் நாம் இருக்கிறோம். ஆனால், அந்த அமைதியே ஆபத்தானதாக மாறிவிடுகிறது. முன்னணி மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்..

முறையான தூக்கமின்மை, உணவின்மை, துரித உணவுகளை உண்ணுதல் போன்ற வாழ்க்கை முறை நோய்களே ரத்த அழுத்தம், கொலஸ்ட்ரால், இதய நோய்கள், நீரிழிவு மற்றும் பிற பிரச்சனைகளுக்குக் காரணமாகின்றன. இதுபோன்ற வாழ்க்கை முறை நோய்கள் ஆரம்ப நிலையிலேயே கண்டறியப்பட்டால், பெரும்பாலான நோயாளிகளைப் பெரிய அறுவை சிகிச்சைகள் தேவையின்றி குணப்படுத்த முடியும்.

இது குணமடைவதற்கான வாய்ப்புகளை அதிகரிப்பது மட்டுமல்லாமல், சிகிச்சைக்கான செலவையும் குறைக்கிறது. பல நோய்கள், குறிப்பாக நுரையீரல் மற்றும் உள் உறுப்புகள் தொடர்பானவை, ஆரம்ப கட்டங்களில் வெளிப்படையான அறிகுறிகளைக் காட்டுவதில்லை. அதனால்தான் நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் போன்ற நாள்பட்ட நோய்களைத் தடுப்பதில் ஆரம்பகால சோதனைகள் உயிர்காக்கும் காரணிகளாக உள்ளன.

'சயின்ஸ் டைரக்ட்' அறிக்கையின்படி, உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்களுக்கு, தங்களுக்கு அந்தப் பிரச்சனை இருப்பதே தெரிவதில்லை. ரத்தச் சர்க்கரை அளவு உயர்ந்து, இரத்த அழுத்தம் ஏற்ற இறக்கமாக இருக்கும்போதும், அவை நமது உறுப்புகளையும் நரம்புகளையும் உள்ரீதியாகத் தொடர்ந்து சேதப்படுத்துகின்றன. அதனால்தான் உயர் ரத்த அழுத்தம் 'சைலண்ட் கில்லர்' என்று அழைக்கப்படுகிறது.

புற்றுநோய் போன்ற நோய்கள்கூட ஆரம்பக் கட்டங்களில் எந்த வலியையும் ஏற்படுத்துவதில்லை. சோர்வு மற்றும் எடை இழப்பு போன்ற அறிகுறிகள் தொடங்கும் நேரத்தில், நோய் முற்றியிருக்கலாம். அதனால்தான் 'அச்சமூட்டும் முன் பரிசோதனை செய்' என்ற கொள்கை மிகவும் முக்கியமானது.

மார்பகப் புற்றுநோய்க்கான மேமோகிராம், கருப்பை வாய்ப் புற்றுநோய்க்கான பாப் ஸ்மியர், மற்றும் பெருங்குடல் புற்றுநோய்க்கான கொலோனோஸ்கோபி போன்ற பரிசோதனைகள் உயிர்களைக் காப்பாற்ற முடியும். 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் அல்லது குடும்பத்தில் இந்நோய் வரலாறு உள்ளவர்கள், வருடத்திற்கு ஒருமுறை முழுமையான உடல் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். வகை 2 நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள், தங்கள் இரத்தச் சர்க்கரை அளவு அபாயகரமான நிலையை அடையும் வரை தங்களை ஆரோக்கியமானவர்களாகக் கருதுகின்றனர். அதேபோல், கல்லீரல் நோய்கள் முற்றிய நிலையில் மட்டுமே அசௌகரியத்தை ஏற்படுத்துகின்றன.

உடற்பயிற்சி மிகவும் முக்கியமானது. ஆரோக்கியமாக இருப்பது என்பது வெறும் பரிசோதனை செய்துகொள்வது மட்டுமல்ல... ஒரு சமச்சீரான உணவு, உடற்பயிற்சி மற்றும் மன அழுத்தமில்லாத வாழ்க்கை முறை ஆகியவை நோய்களின் தீவிரத்தைக் குறைக்க உதவும். பரிசோதனைகளின் நோக்கம் நோயைக் கண்டறிவது அல்ல. இது, நம் உடலுக்குள் என்ன நிகழ்கிறது என்பதை அறிந்து கொண்டு, அதற்கேற்ப நம்மைத் தயார்படுத்திக்கொள்வது பற்றியதாகும். நோய்க்குறிகள் தென்படும்போது மட்டுமே மருத்துவரை அணுகும் பழைய வழக்கத்தைக் கைவிட்டு, நோய்த்தடுப்பு நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் நாம் நீண்ட காலத்திற்கு ஆரோக்கியமான வாழ்வை வாழ முடியும். உடலுக்குள் மெதுவாக வளரும் நோய்களை எதிர்கொள்வதை விட, ஆரம்ப நிலையிலேயே மேற்கொள்ளப்படும் ஒரு சிறிய பரிசோதனையானது நமக்கு ஒரு வலிமையான கவசமாக அமைகிறது.



அவினாசி திருப்புக் கொளியூர் ஆதீனம் தவத்திரு. ஸ்ரீலஸ்ரீ காமாட்சிதாஸ சுவாமிகள் அவர்களை நடைபெறுகிற அவிநாசி சட்டமன்ற தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி சார்பில் போட்டியிடும் எல்.முருகன் அவர்கள் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

# புதுச்சேரியை மண்ணின் மைந்தர்களே ஆள வேண்டும்; ராகுல் காந்தி!

புதுச்சேரி, ஏப். 06–

புதுச்சேரியை மண்ணின் மைந்தர்களே ஆள வேண்டும். துணைநிலை ஆளுநர் மட்டும் ஆட்சி செய்வதை காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளவில்லை. அரசு வேலைவாய்ப்புக்கான வயதுவரம்பு 40 ஆக அதிகரிக்கப்படும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.20 லட்சம் மருத்துவ காப்பீடு வழங்கப்படும்.



காங்கிரஸ் ஆட்சி அமைந்த 6 மாதங்களுக்குள் உள்ளாட்சி தேர்தல் நடத்தப்படும் என புதுச்சேரி தேர்தல் பரப்புரையில் ராகுல் காந்தி கூறினார் அண்ணாமலை உடன் வேட்பு மனுத் தாக்கல் செய்த வானதி கோவை வடக்கு தொகுதியில் போட்டியிடும் பா.ஜ.க வேட்பாளர் வானதி சீனிவாசன் இன்று வேட்பு மனுத் தாக்கல் செய்தார். அப்போது முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை, ராஜஸ்தான் முதலமைச்சர் பஜன்லால் சர்மா உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# சென்னையில் பல்வேறு இடங்களில் பரவலாக மழை!

சென்னை, ஏப். 06–

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கடந்த மாதம் முதலே வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்பட்டது. இதன் காரணமாக பொது மக்கள் கடும் அவதிக்குள்ளாகினர். இதன் காரணமாக மக்கள் வெளியே செல்வதை குறைத்துக் கொண்டனர். குறிப்பாக மதியம் 12 மணி முதல் மாலை 4 மணி வரை சாலைகள் வெறிச்சோடிய நிலையில் காணப்பட்டன.



இதனிடையே, தென்தமிழகம் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். விருதுநகர், தேனி, மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களின் மலை பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்து இருந்தது. அதற்கேற்றார் போல் ஆங்காங்கே திடீரென கருமேகங்கள் சூழ்வதும், அவ்வப்போது தூறல்கள் போடுவதுமாக இருந்து வந்தது.

இந்நிலையில், சென்னையில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

அந்த வகையில், சுட்டெரிக்கும் கோடை வெயிலை தணிக்கும் வகையில் சென்னையில் பலத்த காற்று, இடியுடன் கூடிய பரவலாக கனமழை பெய்து வருகிறது. சென்னை எழும்பூர், கீழ்ப்பாக்கம், சேத்துபட்டு, நுங்கம்பா க்கம், புதுப்பே ட்டை, ஆயிரம் விளக்கு, ராயப்பேட்டை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மிதமான மழை பெய்து வருகிறது.

# டிரம்பின் நடவடிக்கையால் ஒட்டுமொத்த பிராந்தியமும் தீக்கிரையாகும்: ஈரான் கடும் எச்சரிக்கை!

டெஹ்ரான், ஏப். 06–

ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டாக இணைந்து கடந்த பிப்ரவரி மாதம் 28–ம் தேதி தாக்குதல் நடத்தின. இந்த தாக்குதலில் ஈரான் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி உள்பட பலர் உயிரிழந்தனர். இதையடுத்து, மத்திய கிழக்கில் அமெரிக்க படைத்தளம் உள்ள நாடுகள் மீதும், இஸ்ரேல் மீதும் ஈரான் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது.




அதேவேளை, ஈரான் மீது இஸ்ரேலும், அமெரிக்காவும் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. போர் சூழலால் ஹார்முஸ் ஜலசந்தி பகுதியை ஈரான் மூடியுள்ளது. இதனால் அரபு நாடுகளில் இருந்து கப்பல்கள் மூலம் உலகின் பிற நாடுகளுக்கு கச்சா எண்ணெய் கொண்டுசெல்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. மேலும், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்துள்ளது. இதனால் மத்திய கிழக்கில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.

இதனிடையே, ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் திறக்க வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி கெடு விதித்திருந்தார். மேலும், ஹார்முஸ் ஜலசந்தியை திறக்காவிட்டால் நரகத்தில் வாசல் திறக்கப்படும் என்றும் அவர் மிரடல் விடுத்திருந்தார். அதன்படி, டிரம்ப்பின் கெடு இன்றுடன் நிறைவடைய உள்ளது.

ஆனால், டிரம்ப்பின் கெடுவை நிராகரித்த ஈரான், ஹார்முஸ் ஜலசந்தியை திறக்கமாட்டோம் என்று திட்டவட்டமாக கூறியுள்ளது. இதனையடுத்து, ஹார்முஸ் ஜலசந்தியை திறக்காவிட்டால் ஈரானின் மின் நிலையங்கள், பாலங்கள் தகர்க்கப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் மிரட்டல் விடுத்துள்ளார்.

இந்த நிலையில், அமெரிக்க அதிபர் டிரம்பின் பொறுப்பற்ற நடவடிக்கையால் முழு பிராந்தியமும் தீக்கிரையாகும் என ஈரான் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது. "நெதன்யாகுவின் கட்டளைகளைப் பின்பற்றும் டிரம்ப் அமெரிக்க மக்களை நரக வேதனையில் தள்ளுகிறார் என்றும் போரால் எதையும் சாதிக்க முடியாது. ஈரானின் உரிமைகளை மதித்து, இதை முடிவுக்குக் கொண்டு வருவதே ஒரே தீர்வு என்றும் ஈரான் நாடாளுமன்ற சபாநாயகர் முகமது காலிபாப் தெரிவித்துள்ளார்.

# தென் மாவட்டங்களில் சசிகலா பிரச்சாரம்!



சென்னை, ஏப். 06–

கட்சி தலைமை அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர் சசிகலா, 07–ம் தேதிமுதல் 10–ம் தேதி வரை, இக்கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

அதன்படி 07–ம் தேதி, திருப்பரங்குன்றம், மதுரை மத்தி, திருமங்கலம், சோழவந்தான், உசிலம்பட்டி, ஆண்டிபட்டி தொகுதிகளிலும், 8–ம் தேதி போடி, நிலக்கோட்டை, திண்டுக்கல், மேலூர், தொகுதிகளிலும், 9–ம் தேதி சிவகங்கை, மானாமதுரை, திருச்சுழி, அருப்புக்கோட்டை, சாத்தூர் தொகுதிகளிலும், 10–ம் தேதி சிவகாசி, ஸ்ரீவில்லிப்புத்தூர், ராஜபாளையம், வாசுதேவநல்லூர், சங்கரன்கோவில் ஆகிய தொகுதிகளிலும் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.



மதுரை மத்திய தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் புதிய நீதி கட்சி சார்பாக திரைப்பட இயக்குனர் சுந்தர் C. வாக்குகள் சேகரித்தார். உடன் முன்னாள் துணை மேயர் பி.எம். மன்னன், பட்டர் எஸ். குமார், வழக்கறிஞர் எஸ்.சங்கரன், சிவ பிரபாகரன் ஆகியோர் உள்ளனர்.

# வெளியானது வாக்காளர்கள் இறுதி பட்டியல்!

சென்னை, ஏப். 06–

தமிழக சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு வாக்களிக்க தகுதியானவர்களின் பட்டியல் வெளியானது..



தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை தொடர்ந்து கடந்தாண்டு டிசம்பர் மாதம் வெளியான பட்டியலில் 97,37,831 பெயர்கள் நீக்கப்பட்டன.

இதில் தகுதியான நபர்கள் மீண்டும் ஆவணங்களை சமர்ப்பித்து விண்ணப்பிக்கலாம் என கூறப்பட்டது, இதனடிப்படையில் வெளியான பட்டியலில் 5.67 கோடி பேர் இடம்பெற்றிருந்தனர்.

தொடர்ந்து புதிய வாக்காளர்கள், இடம்பெயர்ந்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க கால அவகாசம் வழங்கப்பட்டு கடந்த மாதம் 26ம் தேதி இறுதிநாள் என அறிவிக்கப்பட்டது. காலக்கெடு முடிவடைந்த நிலையில், இன்று வாக்காளிக்க தகுதியானவர்களின் பட்டியல் இறுதி செய்யப்பட்டது..

தொடர்ந்து வாக்காளர் தகவல் சீட்டு (பூத் சிலிப்) அச்சிடப்பட்டு, நாளை முதல் வீடு வீடாக வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதில் வரிசை எண் மற்றும் பாகம் எண் வழக்கத்தை விட பெரிதாக அச்சிடப்பட்டு, புகைப்படத்துக்கு பதிலாக க்யூ ஆர் குறியீடு இடம்பெற்றிருக்கும்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881

# வேலை வாய்ப்பு
## இந்திய ராணுவத்தில் பணி!

இந்திய ராணுவ ஆட்சேர்ப்பு 2027–க்கான இணையவழிப் பதிவுக் காலக்கெடுவை நீட்டிப்பதாக இந்திய ராணுவம் அறிவித்துள்ளது. முதலில் 01 ஏப்ரல் 2026 அன்று முடிவடைய இருந்த பதிவுக் காலம், தற்போது 10 ஏப்ரல் 2026 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

**விண்ணப்பிக்கும் முறை:**

தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் www.joinindianarmy.nic.in என்ற அதிகாரப்பூர்வ இணையதளம் மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.திருத்தப்பட்ட காலம்: 13 பிப்ரவரி 2026 முதல் 10 ஏப்ரல் 2026 வரை.தேர்வுக் கட்டணம்: ஒரு விண்ணப்பத்திற்கு ₹250 கட்டணம் செலுத்த வேண்டும். (கிரெடிட்/டெபிட் கார்டு, யுபிஐ அல்லது நெட் பேங்கிங் மூலம் செலுத்தலாம்).தேர்வு முறை: இணையவழி பொது நுழைவுத் தேர்வு (CEE), உடல் தகுதி மற்றும் மருத்துவப் பரிசோதனைகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

**கல்வித் தகுதிகள் (பதவி வாரியாக):**

அக்னிவீர் ஜெனரல் டியூட்டி (GD): 10–ஆம் வகுப்பில் 45% மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தபட்சம் 33% மதிப்பெண்கள் அவசியம்.அக்னிவீர் டெக்னிக்கல்: 12–ஆம் வகுப்பில் இயற்பியல், வேதியியல், கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுடன் 50% மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். அக்னிவீர் கிளார்க் / ஸ்டோர் கீப்பர்: 12–ஆம் வகுப்பில் ஏதேனும் ஒரு பிரிவில் (Arts/Commerce/Science) 60% மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அக்னிவீர் டிரேட்ஸ்மேன்: 8 அல்லது 10–ஆம் வகுப்பு தேர்ச்சி மற்றும் ஒவ்வொரு பாடத்திலும் 33% மதிப்பெண்கள்.


**வயது வரம்பு:**

அனைத்து பிரிவுகளுக்கும் குறைந்தபட்சம் 17.5 வயது முதல் அதிகபட்சம் 21 வயது வரை இருக்க வேண்டும். (விண்ணப்பிக்கும் தேதியில் இந்த வயது வரம்பிற்குள் இருக்க வேண்டும்). விண்ணப்பதாரர்கள் கடைசி நேர சிக்கல்களைத் தவிர்க்க, காலக்கெடுவிற்கு முன்பே பதிவு செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். தகுதி நிபந்தனைகளை இணையதளத்தில் சரிபார்த்துக் கொள்ளவும்.உதவிக்கு தொடர்பு கொள்ள:ஏதேனும் உதவி தேவைப்பட்டால், சென்னையில் உள்ள மண்டல ஆட்சேர்ப்பு அலுவலகத்தை அணுகலாம்.

**முகவரி:**

Recruiting Office (Headquarters) Chennai,
Saint Fort George, Chennai – 600009.
தொலைபேசி எண்: 044–25674924

இத்தகவலை வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, தெரிவித்துள்ளார்.



## சினிமா துளிகள்..!

## கயல் சீரியல் நடிகை தற்கொலை..!




பிரபல சின்னத்திரை தொலைக்காட்சி தொடரில் நடித்து வருபவர் சுபாஷிணி (வயது36). இலங்கையை சேர்ந்த இவர் கடந்த 2024–ம் ஆண்டு பெங்களூரை சேர்ந்த பிப்பின் சந்திரன் என்பவரை திருமணம் செய்து கொண்டார்.

சுபாஷிணி படப்பிடிப்பில் கலந்து கொள்வதற்கு வசதியாக சென்னை போரூர் அடுத்த அய்யப்பன்தாங்கல் பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பில் வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்து வைத்துள்ளார். இந்த நிலையில் கடந்த 3–ந் தேதி சென்னை வந்த அவர் தொலைக்காட்சி தொடர் படப்பிடிப்பில் கலந்து கொண்டு நடித்து வந்தார்.

நேற்று இரவு வழக்கம் போல சுபாஷிணி கணவர் பிப்பின் சந்திரனுடன் வீடியோ கால் மூலம் பேசிக் கொண்டிருந்தார். அப்போது கணவன்– மனைவி இடையே திடீரென தகராறு ஏற்பட்டது. இதில் மனவேதனை அடைந்த சுபாஷிணி திடீரென தனது படுக்கையறையில் தூக்கு போட்டு தற்கொலைக்கு முயன்றார். இதை வீடியோ கால் மூலம் பார்த்து அதிர்ச்சி அடைந்த பிப்பின் சந்திரன் உடனடியாக இதுபற்றி போரூர் போலீசுக்கு தகவல் தெரிவித்தார்.

போலீசார் விரைந்து சென்று சுபாஷிணியின் வீட்டு கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தபோது அவர் தூக்கில் பிணமாக கிடந்தார். இதையடுத்து அவரது உடலை கைப்பற்றிய போலீசார் பிரேத பரிசோதனைக்காக பூந்தமல்லி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் சுபாஷிணி குடும்ப தகராறில் தற்கொலை செய்து கொண்டாரா அல்லது அவரது தற்கொலைக்கு வேறு ஏதும் காரணம் உள்ளதா? என்பது குறித்து சுபாஷிணியின் செல்போனை கைப்பற்றி போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் சுபாஷிணியின் கணவர் பிப்பின் சந்திரனிடமும் போலீசார் விசாரணை நடத்த திட்டமிட்டுள்ளனர்.





# அனல் பறக்கும் தேர்தல் களம்..!



## மும்மொழிக் கொள்கை முதல் நிதி ஒதுக்கீடு வரை: பா.ஜ.க.விடம் கேள்வி எழுப்பிய மு.க.ஸ்டாலின்!

சென்னை, ஏப். 06–

தமிழக முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ்தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:–



கிறிஸ்தவத் தொண்டு நிறுவனங்கள் மீது தாக்குதல் தொடுக்கும் FCRA சட்டத்திருத்தத்தை முழுமையாகத் திரும்பப் பெறுவீர்களா அல்லது அடுத்த வாரமே நிறைவேற்றப் போகிறீர்களா? இவற்றுக்கெல்லாம், பழனி சாமி தனது டெல்லி ஓனர்களிடம் பதில்பெற்றுத் தர முடியுமா?

கண்ணியமற்ற அவதூறுகளை வாந்தி எடுப்பதை விடுத்து, மக்களின் வாழ்வுரிமைப் பிரச்சினைகளை எப்போதுதான் பேசுவீர்கள்?


தமிழ்நாட்டைத் துண்டாட எத்தனை பேர் டெல்லியில் இருந்து படையெடுத்து வந்தாலும், தமிழ்நாடு தலைகுனியாது!

தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிறைவானது! வேட்பாளர் மனு தாக்கல்!!






சென்னை, ஏப். 06–

சட்டமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனு தாக்கல் கடந்த 30–ந்தேதி தொடங்கியது. வேட்புமனு தாக்கல் ஏப். 6–ல் நிறைவடைந்தது. கடைசி நாளான இன்று அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி (எடப்பாடி), தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா (விருத்தாசலம்) உள்ளிட்ட வேட்பாளர்கள் தங்கள் வேட்புமனுவை தாக்கல் செய்தனர். காங்கிரஸ் மற்றும் பா.ஜனதா வேட்பாளர்களும் மனு தாக்கல் செய்தனர். வேட்புமனுக்கள் தாக்கல் முடிந்தவுடன் மனுக்கள் மீதான பரிசீலனை (ஏப் 7–ல்) நடைபெற உள்ளது. இதில் தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளை பின்பற்றாத மனுக்கள் நிராகரிக்கப்படும். வேட்புமனுக்களை திரும்ப பெறுவதற்கு 9–ந்தேதி கடைசி நாள் ஆகும். அன்றைய தினம் மாலையில் இந்த சட்டமன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் இறுதி பட்டியல் வெளியிடப்படும்.

## சளி தொந்தரவா.!! விசிலே மருந்து..செங்கோட்டையன்!



சென்னை, ஏப். 06–

அதிமுக–வில் இருந்து தூக்கியடிக்கப்பட்டு தவெக–வில் தஞ்சம் புகுந்த மாஜி அமைச்சர் செங்கோட்டையன், தவெக–வின் சின்னமான விசிலை அடித்தால் குழந்தைகளுக்கு சளி பிரச்சனை சரியாகி விடும் என்று ஒரு டாக்டர் ரேஞ்சிற்கு பேசியிருப்பது மக்கள் மற்றும் நெட்டிசன்கள் மத்தியில் கடும் கேலிக்குள்ளாகி இருக்கிறது.

## இரவு 10 மணிக்கு மேல் பிரசாரம்: சீமான் மீது வழக்குப்பதிவு!



அரியலூர், ஏப். 06–

நாம் தமிழர் கட்சி சார்பில் அரியலூர் அண்ணா சிலை அருகே நேற்று முன்தினம் சட்டமன்ற தேர்தல் பரப்புரை கூட்டம் நடை பெற்றது. இதில், கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கலந்து கொண்டு பேசினார். இரவு 9.20 மணியளவில் பேச ஆரம்பித்த சீமான் இரவு 10.10 மணி வரை பேசினார். தற்போது தமிழ்நாடு முழுவதும் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளன. இதனால் இரவு 10 மணிக்கு மேல் பிரசாரத்தில் ஈடுபடக்கூடாது என்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இருப்பினும், நேற்று முன்தினம் இரவு 10.10 மணி வரை சீமான் பிரசாரத்தில் ஈடுபட்டதால், அரியலூர் கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், மாநில ஒருங்கிணைப்பாளர் சண்முகம், வேட்பாளர்கள் புகழேந்தி (அரியலூர்), ரேவதி (ஜெயங்கொண்டம்), கீர்த்திவாசன் (குன்னம்), சுகன்யா (பெரம்பலூர்) என மொத்தம் 6 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

## ராணிப்பேட்டையில் போட்டியிடவில்லை: வினோத் காந்தி!!




ராணிப்பேட்டை, ஏப். 06–

ராணிப்பேட்டை தொகுதியில் திமுக சார்பில் தந்தை காந்தி போட்டியிடுவார் என அவரது மகன் வினோத் காந்தி அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது முகநூலில், 2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் ராணிப்பேட்டை தொகுதியில் போட்டியிடும் அரிய வாய்ப்பை எனக்கு அளித்து, என்னை நம்பிக்கை வைத்து தேர்ந்தெடுத்த தலைவருக்கும், சகோதரர் உதயநிதி ஸ்டாலினுக்கும் எனது இதயம் கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், என் தந்தையார் மீண்டும் போட்டியிடும் உறுதியான விருப்பத்தை கருத்தில் கொண்டு, இந்த வாய்ப்பை அவருக்கு மரியாதையுடன் மீண்டும் ஒப்படைக்க முடிவு செய்துள்ளேன். என்னை உறுதியாக ஆதரித்து, நம்பிக்கை அளித்த அனைத்து ஆதரவாளர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகள். இன்னும் நீண்ட வாழ்க்கை முன் உள்ளது என்பதில் உற்சாகத்துடன், சேவை செய்து சாதிக்க நான் உறுதியுடன் இருக்கிறேன். இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

2026 சட்டப்பேரவைத் தேர்தலில் ராணிப்பேட்டை தொகுதியில் மீண்டும் களம் காண அமைச்சர் ஆர்.காந்தி தயாராகி வந்தார். கட்சித் தலைமையிடம் வாய்ப்பு கேட்டு விருப்ப மனுவும் அளித்திருந்தார். இந்த சூழலில் அமைச்சர் ஆர். காந்திக்கு பதிலாக அவரது மகன் வினோத் காந்திக்கு திமுக தலைமை போட்டியிட வாய்ப்பு அளித்தது.


இதனால் அதிர்ச்சியடைந்த அமைச்சர் ஆர்.காந்தி, தனது மகனுக்கு பதில், மீண்டும் தனக்கே போட்டியிட வாய்ப்பு வழங்க வேண்டும் என திமுக தலைமையிடம் கோரிக்கை விடுத்தார். இந்த நிலையில், ராணிப்பேட்டை தொகுதியில் திமுக வேட்பாளராக போட்டியிட அமைச்சர் ஆர். காந்திக்கு மீண்டும் வாய்ப்பை கட்சித் தலைமை வழங்கியுள்ளது. இதையடுத்து அவர் திங்கள்கிழமை வேட்புமனு தாக்கல் செய்யவுள்ளார்.



புதுக்கோட்டை மாவட்டம் புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதியில் திமுக வேட்பாளர் மருத்துவர் முத்துராஜாவை ஆதரித்து துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் புதுக்கோட்டை திலகர் திடலில் பிரச்சாரம் மேற்கொண்டார்.




தேனி மாவட்டம் போடி சட்டமன்றதொகுதி தி.மு.க.வேட்பாளர் முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் அறிமுக செயல்வீரர்கள் கூட்டம் போடி தனியார் மண்டபத்தில் வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி தலைமையில் போடி தனியார் மண்டபத்தில் நடைபெற்றது முன்னாள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முன்னால் மாநில செயலாளர் முத்தரசன் மாநில தேர்தல் பணிக்குழு செயலாளர் கம்பம் செல்வேந்திரன் மாவட்ட அவை தலைவர் பி.டி செல்ல பாண்டியன், போடி தொகுதி பார்வையாளர் நேரு பாண்டியன் மற்றும் ஒன்றிய செயலாளர்கள் நகர செயலாளர்கள் பேரூர் செயலாளர்கள் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



பழனி சட்ட மன்ற தொகுதிக்கு அதிமுக சார்பாக ரவிமனோகர் வேட்புமனு தாக்கல் செய்தார்.. முன்னாள் எம்.எல. ஏ.வேணுகோபால், பிஜேபி கனகராஜ், நகர செயலாளர் முருகானந்தம், பாமக வைரமுத்து, தென் இந்திய பார்வேர்டு பிளாக் கட்சி சபரி ஆகியோர் உடன் இருந்தனர்.



பழனியில் தமிழக வெற்றி கழகத்தின் சார்பாக டாக்டர் பிரவீன்குமார் அவர்கள் வேட்பு மனு தாக்கல் செய்தார் உடன் மாவட்டத் தலைவர் கார்த்திக்ராஜன், பழனி பாலன் இருந்தனர்

## சென்னையில் நடைபெறவிருந்த விஜய்யின் பிரசாரம் 'திடீர்' ரத்து!



சென்னை, ஏப். 06–

சென்னையில் போட்டியிடும் த.வெ.க. வேட்பாளர்களை ஆதரித்து அக்கட்சியின் தலைவர் விஜய் இன்று (திங்கட்கிழமை) பிரசாரம் செய்வதாக இருந்தது. வில்லிவாக்கம், அண்ணா நகர், விருகம்பாக்கம், தியாகராயநகர் ஆகிய தொகுதியில் பிரசாரம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்காக தேர்தல் அதிகாரிகள் மற்றும் போலீசாரிடம் அனுமதி கோரி விண்ணப்பித்து இருந்தனர்.

இந்தநிலையில் விஜய் பிரசாரத்திற்கு நேற்று இரவு போலீசார் அனுமதி வழங்கினர். இதில் வில்லிவாக்கம் தொகுதியில் பகல் 12 மணி முதல் மதியம் 1 மணிக்குள் பிரசாரம் செய்து முடிக்கவும், தியாகராயநகர் தொகுதியில் மதியம் 2 மணி முதல் 3 மணிக்குள் பிரசாரம் செய்யவும் அனுமதி வழங்கப்பட்டதாக கூறப்படுகிறது. இந்த அனுமதிக்கப்பட்ட நேரத்தில் விஜய் பிரசாரம் செய்து முடிக்க போதுமானதாக இருக்காது என கட்சி நிர்வாகிகள் தரப்பில் கருத்து தெரிவித்து உள்ளனர்.

இதனையடுத்து விஜய்யின் பிரசாரம் ரத்து செய்யப்படுவதாக தகவல் வெளியானது. போலீஸ் அனுமதித்த நேரத்திற்குள் பிரசாரத்தை முடித்துவிட்டு மற்றொரு இடத்திற்கு செல்ல காலதாமதமாகிவிடும் என்பதால், ரத்து செய்யப்பட்டதாக கட்சியினர் தெரிவித்தனர்.

## நாமக்கல் மாவட்டத்தில் தேர்தல் விதி மீறல் தொடர்பாக இதுவரை 115 புகார்கள் பெறப்பட்டு நடவடிக்கை; மாவட்ட ஆட்சியர்!



நாமக்கல், ஏப். 06–

நாமக்கல் மாவட்டத்தில் தேர்தல் விதி மீறல் தொடர்பாக இதுவரை 115 புகார்கள் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். இது குறித்து மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சியருமான துர்கா மூர்த்தி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது:

இந்திய தேர்தல் ஆணையம் கடந்த மார்ச் 15ம் தேதி தமிழக சட்டசபை தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிட்டது. அதனைத் தொடர்ந்து உடனடியாக தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்துள்ளது.

மாவட்டத்திலுள்ள 6 சட்டசபை தொகுதிகளிலும் பறக்கும் படைகள் மற்றும் நிலையானக் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு தேர்தல் நடத்தை விதிமுறைகள் தொடர்பாக கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மேலும், பறக்கும் படைகள் மற்றும் நிலையானக் கண்காணிப்புக் குழுக்களின் நடவடிக்கைகள் கட்டுப்பாட்டு அறையிலிருந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. பொதுமக்கள் மற்றும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் ஆகியோரிடமிருந்து வரும் புகார்கள் சம்மந்தப்பட்ட குழுவிற்கு தெரிவிக்கப்பட்டு, உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், சி–விஜில் செல்போன் செயலி மூலம் பெறப்படும் புகார்களும், தொடர்புடைய குழுக்களுக்கு அனுப்பப்பட்டு 100 நிமிடங்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்பட்டு நடவடிக்கையின் விவரங்கள் இணையத்தில் அப்லோட் செய்யப்படுகிறது.

நாமக்கல் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மார்ச் 15 முதல் இன்று வரை கட்டுப்பாட்டு அறைக்கு கட்டணமில்லா தொலைபேசி மூலம் 55 புகார்களும், சி–விஜில் செயலி மூலம் 60 புகார்களும் என 115 புகார்கள் பெறப்பட்டுள்ளது.

பெறப்பட்ட புகார்கள் சம்பந்தப்பட்ட குழுக்களுக்கு அனுப்பப்பட்டு, தொடர் நடவடிக்கை மேற்கொண்டு, தீர்வு காணப்பட்டுள்ளது. அதேபோன்று தேர்தல் நடத்தை விதிமுறைகளுக்கு முரணாக எடுத்துச் செல்லப்பட்ட 102 சம்பவங்களில் ரூ. 1 கோடியே, 55 லட்சத்து, 86 ஆயிரத்து 790 பறிமுதல் செய்யப்பட்டது. இதில் 85 பேரின் ஆவணங்கள் சரிபார்க்கப்பட்ட பின்பு ரூ. 1 கோடியே 33 லட்சத்து 27 ஆயிரத்து 410 திருப்பி வழங்கப்பட்டுள்ளது. மேலும், 17 பேர் உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் ரூ. 22 லட்சத்து 59 ஆயிரத்து 380 சம்பந்தப்பட்ட சார் நிலை கருவூலங்களில் வைக்கப்பட்டுள்ளது. சட்டசபை தேர்தல் தொடர்பாக மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்வும் மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டுப்பாட்டு அறை மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. பொதுமக்கள் தேர்தல் தொடர்பான புகார்களைத் தேர்தல் கட்டுப்பாட்டு அறையின் கட்டணமில்லா தொலைபேசி எண் 1800 599 4286 மூலம் தெரிவிக்கலாம் என கூறப்பட்டுள்ளது.

## நாமக்கல்லில் திமுக மற்றும் கூட்டணி கட்சி செயல்வீரர்கள் கூட்டம்!




நாமக்கல், ஏப் 06–


நாமக்கல்லில் நடைபெற்ற, திமுக மற்றும் கூட்டணி கட்சி செயல்வீரர்கள் கூட்டத்தில், கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் ராஜேஷ்குமார் கலந்து கொண்டு, நாமக்கல் சட்டசபை தொகுதி வேட்பாளர் ராணியை ஆதரித்து பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது: தமிழகத்தில் 2021ம் ஆண்டு திமுக ஆட்சி அமைந்தவுடன், நாமக்கல் பகுதிக்கு எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களை நிறைவேற்றியுள்ளோம். குறிப்பாக, நகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், சரக்கு போக்குவரத்தை விரைவுபடுத்தவும், புறநகர் பகுதிகளை இணைத்து பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும் ரூ.401 கோடி செலவில் புதிய ரிங் ரோடு அமைக்கப்பட்டுள்ளது.

நாமக்கல் மாநகரில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. நாமக்கல் நகராட்சி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. ரூ. 313 கோடியில் நாமக்கல்லில் இணைக்கப்பட்ட பகுதியில் பாதாள சாக்கடை திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. நைனாமலை வரதராஜ பெருமாள் கோவிலுக்கு மலைப்பாதை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ரூ. 7 கோடி செலவில் குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மாவட்டத்திற்கு புதிய மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தொடக்கப்பட்டுள்ளது. நாமக்கல், மோகனூர் ரோட்டில் ரூ.90 கோடியில் அதிநவீன ஆவின் பால் பண்ணை அமைக்கப்பட்டு ள்ளது. ரூ.24 கோடியில் மோகனூர் பேரூராட்சிக்கு தனி குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. நாமக்கல் மாநகரில் புதிய சித்த மருத்துவமனை அமைக்கப்பட்டுள்ளது. ரூ. 4 கோடி மதிப்பீட்டில் கொசவம்பட்டி ஏரி புதுப்பிக்கபட்டு நடைபாதை அமைக்கப்பட்டுள்ளது. மேலும் பல மக்கள் நலத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு நாமக்கல் தொகுதி அடுத்தகட்ட வளர்ச்சிக்கு சென்றிட அனைவரும் திமுகவின் உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

நிகழ்ச்சியில் நாமக்கல் கொமதேக எம்.பி.,மாதேஸ்வரன், எம்எல்ஏ ராமலிங்கம், தொகுதி பார்வையாளர் முனவர் ஜான் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## திருப்பூர் தெற்கில் சிங்கம் சின்னத்தில் வாக்கு சேகரிப்பு!



திருப்பூர், ஏப். 06–

அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழக கூட்டணி கட்சியான அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் திருப்பூர் தெற்கு தொகுதி வேட்பாளராக போட்டியிடும் தோழர் கே காளிமுத்து தேவர் அவர்களுக்கு ஆதரவாக 26 வது வார்டு சாரதா நகரில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்ட ஃபார்வர்டு பிளாக் நிர்வாகிகள் மற்றும் இஸ்லாமிய மக்களும் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர் தேசியமும் தெய்வீகமும் எனது இரு கண்கள் என வாழ்ந்த தேசிய தலைவர் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் எப்பொழுதும் இஸ்லாமிய மக்களுக்கு ஆதரவாக இருந்ததாக கூறி இஸ்லாமிய மக்களும் அவருக்கு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்...

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020